# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1896/22 - 2015 ජනවාරි මස 07 වැනි බදාදා - 2015.01.07

*1896/22 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978* (X)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 அ என்னும் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியன்சேலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும் கம்பெனி* PV 66705 *ஆம் இலக்கத்தைக் கொண்டுள்ளதுமான* KAATSU - *ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்நலொஜி டிரெய்னிங் சென்றர் (பிரைவட்) லிமிட்டெட்* (KIU) *கம்பெனி தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இக்கட்டளையாலும் இதற்கான* I *ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமையவும் அதன் சுருக்கீடுகள் முறையே* II *ஆம் அட்டவணையின்* II *ஆம் நிரலின் நேரொத்த பதிவுகளில் தரப்பட்டிருக்கின்றதும் இதற்கான* II *ஆம் அட்டவணையில்* I *ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டதுமான பட்டங்களை அளிப்பதற்கு இட்டுச்செல்கின்றதும், அதன்கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக பட்டம் ஒன்றை அளிக்கும் நிறுவகம் ஒன்றாக* KAATSU - *ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்நலொஜி டிரெய்னிங் சென்றர் (பிரைவெட்) லிமிட்டெட்* (KIU) *ஐ அங்கீகரிக்கின்றேன்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) KAATSU - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்நலொஜி டிரெய்னிங் சென்றர் (பிரைவட்) லிமிட்டெட் (KIU), பட்டம் அளிக்கும் அந்தஸ்து வழங்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவுறுமுன்னர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு கீழே தரப்பட்டவாறு முறையாக திருத்தப்பட்ட அதனது அமைப்பு அகவிதியை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) அமைப்பு அகவிதியின் நோக்கமொன்றாக உயர்கல்வியை குறித்துரைத்தல் ;

(ஆ) தன்னிச்சையான ஒடுக்குதலுக்கு முன்னராக கம்பெனியின் அத்தகைய தன்னிச்சையான ஒடுக்குதலை குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அறிவிப்பதற்கான பொறுப்பை எடுத்தல்.

2. நிறுவகமானது பட்டம் அளிக்கும் அந்தஸ்து வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவுறுமுன்னர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு பின்வரும் விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கான தகைமைபெற்ற கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதியை ஆட்சேர்த்தல் பற்றிய எண்பிப்பு ;

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விழுமியங்களுக்கிணங்க குறித்துரைக்கப்பட்ட கற்கைக்காலப் பகுதிக்கான கற்கை நிகழ்ச்சித்திட்டமொன்று ;

(iii) இயைபான பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு தேவைப்படுத்தப்பட்ட மாணவர்களின் பாடவிளக்க அளிப்பு, பாடப்புத்தகங்கள், கையேடுகள், விதந்துரைக்கப்பட்ட வாசிப்புப் புத்தகங்கள் மற்றும் வேறேதேனும் போதுமான கற்கை உபகரணங்கள் என்பனவற்றின் கிடைப்பனவு பற்றிய எண்பிப்பு ;

(iv) நவீன மயப்படுத்தப்பட்ட நூலகமொன்றின் கிடைப்பனவு ;

(v) அக்குப்பஞ்சர் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் விஞ்ஞானமாணி (சிறப்புப்பட்டம்) தொடர்பில் -

(அ) சிகிச்சை தொழில் புரிவதற்காக ஐந்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் தேவைப்படுகின்றதான கட்டில்களின் போதுமான எண்ணிக்கையின் கிடைப்பனவு பற்றிய எண்பிப்பு ;

(ஆ) அக்குப்பஞ்சர் பற்றிய விதந்துரைக்கப்பட்ட அச்சிடப்பட்ட புத்தகங்களின் கிடைப்பனவு பற்றிய எண்பிப்பு.

3. நிறுவகமானது, தாதிச்சேவை விஞ்ஞானமாணி (சிறப்புப்பட்டம்) பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் தற்போது தொழில்புரிகின்றவரான பதிவு செய்யப்பட்ட தாதிகளை மட்டுமே சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br><br>பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | நிரல் II<br><br>பட்டத்திற்கான சுருக்கீடுகள் |
|---|---|
| KAATSU இல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (மருத்துவ விஞ்ஞானம்) | விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (மருத்துவ விஞ்ஞானம்) (KAATSU) |
| அக்குப்பஞ்சரில் மருத்துவ விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் | விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (மருத்துவ விஞ்ஞானம்) (அக்குப்பஞ்சர்) |
| தாதிச் சேவையில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் | விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (தாதிச் சேவை) |

இக்கட்டளையில் "குறித்துரைக்கப்பட்ட அதிகாரி" என்பது, உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சுக்கான அமைச்சுச் செயலாளர் எனப் பொருள்படும்.

திசாநாயக்க முதியன்சேலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2015, சனவரி 07.

01 - 641

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.